**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு 2015, தீபாவளி தினத்தன்று கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கைத் துணி வழங்குதல் – ரூ.5,87,235/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண் 39**

**நாள்: 03.11.2015**
**மன்மத–ஐப்பசி 17,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (டி) எண்.24, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.08.2014.
2. அரசாணை (1டி) எண்.12, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 08.07.2015.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.815/மஇநிர்(3)/2015, நாள் 21.07.2015 மற்றும் 18.08.2015.

----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி மற்றும் சட்டை/சேலை மற்றும் ரவிக்கை துணி 2014, தீபாவளி தினத்தன்று வாங்கி வழங்குவதற்கு ரூ.5,27,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்கும் மிகையாக, கூடுதல் தொகையில் வாங்கி வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பும், கூடுதல் செலவினம் ரூ.14,814/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2015 ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1049 இல்லவாசிகளுக்கு வேட்டி, சட்டை மற்றும் புடவை ரவிக்கை வழங்கிட ரூ.5,21,220/– தேவைப்படுவதால் கடந்த நிதியாண்டின் நிலுவை ரூ.66,015/– உடன் 2015–16 ஆம் நிதியாண்டிற்கான தொகை ரூ.5,21,220/–ம் சேர்த்து ரூ.5,87,235/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கோரியுள்ளார்.

[த.பி.பா.]

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை, கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2015–2016 ஆம் நிதியாண்டில், 2015, தீபாவளி தினத்தன்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1049 இல்லவாசிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கை ஆகியவற்றினை வழங்கிட தேவையான ரூ.5,21,220/–ம் (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்து ஓராயிரத்து இருநூற்று இருபது மட்டும்) கடந்த நிதியாண்டின் நிலுவைத் தொகை ரூ.66,015/–ம் சேர்த்து ரூ.5,87,235/– (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து மட்டும்) (ரூ.5,21,220/– + ரூ.66,015/–) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் இச்செலவினத்தை மேற்கொள்ளுமாறு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் - I–திட்டத்தில் சேராதது – AI– தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 46–உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள் (து.தொ.கு.2235–02–104–AI – 4609).**

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண் 58864/நிதி(சந)/2015, நாள் 03.11.2015–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**

முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந)துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.